எம்.சி.ஓ.பி எண்: 3996 /2019 தேதி: 10.10.2025

மசா. : 1

பெயர் : குமார்

த/பெ. : சகாதேவன்

வயது : 51

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து காண்பித்தார்கள் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ1 முதல் 21வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. புகார் நான் கொடுக்கவில்லை. மகன் கொடுத்தார். என் மகன் இருசககரவாகனத்தை ஓட்டிச்சென்றபோது என் மனைவி பின்னால் அமர்ந்து இருந்தார். அப்போதுதான் விபத்து நடந்தது என்றால் சரி. குற்ற வழக்கு விவரம் தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் மீது தவறு இல்லை என அவர் விடுதலை ஆன விவரம் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியாது. சொன்னார்கள். என் மகன் இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் இருந்தது. அந்த ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மசாஆ 11,12 ஆவணத்தை வழங்கியவர்களை விசாரித்தால் அது உண்மையான ஆவணமா என தெரியவரும் என்றால் அவர் நீதிமன்றத்திற்கு வருவார். நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய மகனின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. நான்கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் எ்னறால் சரியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.